வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்- நாராயணசாமி

தேதி 13.12.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

24 ஆண்டுகளுக்கு முன்பு டிசம்பர் 13 ஆம் தேதி நடந்த நாடாளுமன்ற தாக்குதலில் உயிரிழந்த தியாகிகளுக்கு, தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் திங்கட்கிழமை தொடங்கி, ஜோர்டன், எத்தியோப்பியா மற்றும் ஓமன் ஆகிய 3 நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளார்.

மாறி வரும் சூழலுக்கு ஏற்ப இந்திய பாதுகாப்பு படைகள் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த உறுதி பூண்டுள்ளதாக முப்படைகளின் தலைமை தளபதி ஜெனரல் அனில் சௌகான் வலியுறுத்தி உள்ளார்.

குளிர்காலம் மற்றும் மூடுபனி காலத்தில் விமான நிலையத்தின் தயார் நிலையை சரிபார்ப்பதற்கான ஒத்திகை நிகழ்ச்சி இன்று புதுச்சேரி விமான நிலையத்தில் நடைபெற்றது.

நாடாளுமன்ற தாக்குதல் (15)

2001 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் இதே நாளில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த 9 பேருக்கு நாடு இன்று அஞ்சலி செலுத்துகிறது. 24 ஆண்டுகளுக்கு முன்பு டிசம்பர் 13 ஆம் தேதி நடந்த தாக்குதலில் உயிரிழந்த தியாகிகளுக்கு, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவரும், மாநிலங்களவை தலைவருமான திரு சி பி இராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் திரு அமித் ஷா, திரு ராஜ்நாத் சிங், டாக்டர் ஜெய்சங்கர், திரு பியூஷ் கோயல், திரு ஜிதேந்தர் சிங், திரு கிரண் ரிஜிஜூ, திரு அர்ஜூன் ராம் மெக்வால் ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர். மக்களவை எதிர்கட்சி தலைவர் திரு ராகுல்காந்தி, காங்கிரஸ் மூத்த தலைவர் திருமதி சோனியாகாந்தி, மற்றும் பிற நாடாளுமன்ற உறுப்பினர்களும் மலர் தூவி மரியாதை செலுத்தினர். குடியரசு தலைவர் திருமதி

திரவுபதி முர்மு வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், கடமைக்கான அர்ப்பணிப்புடன் செயல்படும் வீரர்களுக்கான துணிச்சல் மற்றும் தியாகத்திற்கு நாடு வணக்கம் செலுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

மோடி பயணம் 1 (3)

பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் திங்கட்கிழமை முதல், ஜோர்டன், எத்தியோப்பியா மற்றும் ஓமன் ஆகிய 3 நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ள உள்ளார். பிரதமரின் பயணம் குறித்த கூடுதல் தகவல்கள்........

மோடி பயணம் 2 (16)

பிரதமர் திரு நரேந்திர மோடியின் 4 நாள் பயணம் குறித்து நேற்று மாலை புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு அமைச்சகத்தின் செயலாளர் டாக்டர் மீனா மல்ஹோத்ரா, மன்னர் அப்துல்லா இரண்டு பின் அல் உசைனின்அழைப்பின் பேரில் பிரதமர் வரும் 15 மற்றும் 16 ஆம் தேதிகளில் ஜோர்டனுக்கு பயணம் மேற்கொள்கிறார் என்று தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளின் 75 ஆண்டு கால நிறைவை ஒட்டி பிரதமரின் இந்த பயணம் இரு நாடுகளுக்கும் இடையேயான வலுவான பொருளாதார உறவுகளை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இந்தியா, ஜோர்டனில் 3 ஆவது பெரிய வர்த்தக பங்குதாரர் என்றும் டாக்டர் மல்ஹோத்ரா கூறினார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் இந்த சுற்றுப் பயணத்தின் 2 ஆம் கட்டமாக வரும் 16 மற்றும் 17 ஆம் தேதிகளில் எத்தியோப்பியாவிற்கு செல்வார் என்றும், அங்கு எத்தியோப்பியா பிரதிநிதி டாக்டர் அபி அகமது அலியுடன் நேரில் சந்தித்து, பிரதிநிதிகளுடனான பேச்சுவார்த்தையில் ஈடுபட உள்ளார் என்றும் டாக்டர் மல்ஹோத்ரா தெரிவித்தார்.

மோடி பயணம் 3 (6)

தொடர்ந்து, 17 மற்றும் 18 ஆம் தேதிகளில் பிரதமர் ஓமன் நாட்டிற்கு செல்ல உள்ளார் என்று விசா மற்றும் வெளிநாட்டு விவகாரங்கள் துறை செயலாளர் திரு அருண்குமார் சாட்டர்ஜி தெரிவித்தார். இந்த பயணத்தின் போது உயர்மட்ட குழுவினரும், பிரதமருடன் செல்ல உள்ளனர் என்றும், இந்த

சந்திப்பின் போது பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக திரு சாட்டர்ஜி கூறினார்.

*எம்பி விளையாட்டு விழா* (12)

மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா இன்று உத்ரகண்ட் மாநிலம் பவுரி மாவட்டத்தில் உள்ள கண்டோலியா மைதானத்தில், மத்திய பிரதேச விளையாட்டு விழாவை தொடங்கி வைத்தார். இளைஞர்களிடையே உரையாற்றிய அவர், தேசத்தை கட்டமைப்பதில் விளையாட்டின் பன்பாட்டை எடுத்துரைத்து, பவுரி மாவட்டத்தை ஒரு விளையாட்டு மையமாக மேம்படுத்துவதில் மத்திய அரசின் உறுதிப்பாட்டை வலியுறுத்தினார். மேலும், இந்த விழா, இளம் திறமையாளர்களுக்கு ஒரு வெளிப்படையான தளத்தை வழங்கவும், விளையாட்டு பண்பாட்டை வலுப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். இந்த விழாவில் இருந்து வெளிவரும் திறமையான வீரர்கள், 2030 காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளில் இந்தியா சார்பில் பங்கேற்பார்கள் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

*ராணுவ பயிற்சி* (8)

இந்தியா-மலேஷியா இடையே ஹரிமாவ் சக்தி 2025 கூட்டு ராணுவ பயிற்சி ராஜஸ்தான் மகாஜன் தளத்தில் உள்ள துப்பாக்கி சுடும் பயிற்சி இடத்தில் நடைபெற்று வருகிறது. இப்பயிற்சி டிசம்பர் 18 ஆம் தேதி நடைபெற உள்ளது என்றும், இருதரப்பு வீரர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, தீவிர கூட்டு பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த பயிற்சியில் ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களின் கண்காட்சி நேரடி துப்பாக்கி சுடும் பயிற்சிகள் மற்றும் ராணுவ தற்காப்பு கலைகள், யோகா உள்ளிட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

*சர்பானந்த சோனோவால்* (10)

நாடு முழுவதும் 12 பெரிய துறைமுகங்களும், 217 சிறிய துறைமுகங்களும் செயல்பட்டு வருவதாக மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார். மக்களவையில் இன்று எழுத்து மூலம் அளித்த பதிலில் இதனை தெரிவித்த அவர், 68 துறைமுகங்களில் சரக்குகளை கையாளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், 134 இடங்களில் சரக்குகளை

கையாளுவதற்கான கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். தமிழகத்தில், கோயம்பத்தூர், மதுரை, சேலம், திருப்பூர், அரக்கோணம் உள்ளிட்ட இடங்களில் இந்த கிடங்குகள் செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

*அனில் சௌகான்* 1 (7)

மாறி வரும் சூழலுக்கு ஏற்ப இந்திய பாதுகாப்பு படைகள் தங்களை மாற்றிக் கொள்ளவும், சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தவும் உறுதி பூண்டுள்ளதாக பாதுகாப்பு படை தலைவர் ஜெனரல் அனில் சௌகான் வலியுறுத்தி உள்ளார். ஐதராபாத் அருகில் உள்ள துண்டிகலில் உள்ள விமானப்படை அகடமியில் இன்று நடைபெற்ற 216 ஆவது ஒருங்கிணைந்த பட்டமளிப்பு அணிவகுப்பில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார். இது குறித்த ஒருசெய்தித் தொகுப்பு......

*அனில் சௌகான்* 2 (17)

ஐதராபாத் விமான படை அகடமியில் இன்று உரையாற்றிய ஜெனரல் அனில் சவுகான், இந்தியாவின் பலம், வலுவான நிறுவனங்கள், ஜனநாயக உறுதிப்பாடு மற்றும் ஆயுதப்படைகளின் அசைக்க முடியாத தொழில்முறை ஆகியவற்றில் அடங்கி உள்ளது என்று கூறினார். பாதுகாப்பு படையின் நடவடிக்கைகளில் தீவிரம் குறைந்திருந்தாலும், ஆபரேஷன் சிந்தூர் தொடர்கிறது என்றும் அவர் கூறினார். விமானப்படையில் புதிய அதிகாரிகள் இணைந்துள்ளதாக கூறிய ஜெனரல் சவுகான், ஒருங்கிணைந்த கட்டமைப்புகள், கூட்டு நடவடிக்கைள் மற்றும் பாதுகாப்புத் துறையில் ஆத்ம நிர்பர் பாரதம் திட்டம் ஆகியவை இந்தியாவின் ராணுவ வலிமையின் எதிர்காலத்தை வடிவமைக்கின்றன என்றும் கூறினார். முன்னதாக, பயிற்சியை முடித்த விமான கேடட்டுகளுக்கு குடியரசு தலைவரின் ஆணை, மற்றும் பயிற்சியின் போது சிறப்பாக செயல்பட்டவர்களுக்கு விருதுகளையும் அவர் வழங்கினார். இந்திய கடலோர காவல் படையை சேர்ந்த 8 பேர், இந்திய கடற்படையை சேர்ந்த 6 பேர் மற்றும் வியட்நாமை சேர்ந்த 2 பேர் உட்பட மொத்தம் 244 பயிற்சியாளர்கள் அணிவகுப்பில் பங்கேற்றனர். பல்வேறு அணிகளின் வான்வழி சாகச நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

புதுச்சேரி-ஒத்திகை (12)

தற்போதைய குளிர்காலம் மற்றும் மூடுபனி நிலவரம் காரணமாக விமான நிலையத்தின் தயார் நிலையை சரிபார்க்க இன்று காலை புதுச்சேரி விமான நிலையத்தில் மூடுபனி தயார் நிலை ஒத்திகை நடைபெற்றது. இந்த ஒத்திகை பயிற்சியில், விமான நிலைய இயக்குநர், விமான போக்குவரத்து கட்டுப்பாடு, தகவல் தொடர்பு, கண்காணிப்பு, செயல்பாடுகள், தீயணைப்பு, மோட்டார் போக்குவரத்து, மின் பொறியியல், சிவில் பொறியியல் உள்ளிட்ட துறைகள் சார்ந்த அதிகாரிகள் பங்கேற்றனர். மேலும், ஏபிஎஸ்யு, இண்டிகோ விமான நிறுவன மேலாளர், வானிலை ஆய்வுத் துறை பொறுப்பாளர் ஆகியோரும் ஒத்திகையில் கலந்து கொண்டனர். மூடுபனி நிலைகளின் போது சிக்கித் தவிக்கும் பயணிகளுக்கு உதவும் வகையில் பாதுகாப்பு பகுதிக்குள் ஒரு தனி இடம் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கோல் சேது (14)

பல்வேறு தொழில்துறை பயன்பாடுகள் மற்றும் ஏற்றுமதிக்காக நிலக்கரி இணைப்புகளை ஏலம் விடுவதற்கு ஒரு புதிய வழியை உருவாக்கும் **கோல் சேது** கொள்கைக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை குழு தடையற்ற மற்றும் திறமையான ஏலக் கொள்கைக்கு நேற்று ஒப்புதல் அளித்துள்ளது. இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், 2016 ஆம் ஆண்டில் ஒழுங்குபடுத்தப்படாத துறை, ஏலக் கொள்கையில் **கோல் சேது** என்ற தனி சாளரத்தை சேர்ப்பதன் மூலம் தொழில்துறை பயன்பாடு மற்றும் ஏற்றுமதிக்கு ஏதுவாக அமையும் என்று கூறினார். மேலும், 2027 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக நடத்தப்படும் என்றும், இது டிஜிட்டல் முறையில் சாதிவாரியாக எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

நட்டா (8)

இமாச்சலபிரதேச தலைநகரான சிம்லாவில், பிஜேபியின் புதிய தலைமையாக கட்டிடத்திற்கு அக்கட்சியின் தேசிய தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ஜே பி நட்டா இன்று அடிக்கல் நாட்டினார். அம்மாநிலத்தில், 2027 ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ள நிலையில், கட்சி உறுப்பினர்களுடன் அவர் ஆலோசனை கூட்டம் நடத்தினார். பீகார் சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்றதை தொடர்ந்து திரு ஜே பி நட்டா இமாச்சல பிரதேசத்திற்கு பயணம் மேற்கொண்டுள்ளது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

வானிலை (10)

கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தென் தமிழகம் மற்றும் டெல்டா மாவட்டங்களின் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் இன்றும், நாளையும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும், தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகாலையில் லேசான பனி மூட்டம் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தென் தமிழக கடலோர பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரி கடல் பகுதிகளில் 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.